# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 18
துல் ஹஃதா பிறை 1
புதன் (4-10-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 36

விலை சதம் 35


## யாழ்ப்பாணத்துக்கு சிங்கள நீதவான்

தமிழ் பிரதேசத்து நீதி மன்றங்களில் தமிழுக்கு இடமளித்திருக்கிறோம். என்று கூறிக்கொண்டு, நடைமுறையில் தமிழ் அந்த உரிமையை இழக்கக் கூடிய முறையில் வர்த்த மானி உத்தரவு மூலம் ஆங் கிலத்தையும், சிங்களத்தை யும்நீதியமைச்சர்திரு.தேவ நாயகம் நீதி மன்றங்களில் புகுத்தியது தெரிந்ததே.

இப்பொழுது ஆங்கி லத்தை அல்லது சிங்களத் தையே தமிழ் பிரதேச நீதி மன்றங்களில் புகுத்தவும் தமிழை நீக்கவும் வசதியாக தமிழ் பிரதேச நீதி மன் றங்களில் சிங்கள நீதவான் களை அரசு நியமித்து வரு கிறது.

நூற்றுக்குநூறுவிதம் தமி ழர்களைக் கொண்ட யாழ்ப் பாண நீதி மன்றத்துக்கு 2-10-78 முதல் சிங்களவர் ஒருவர் நீதவானாக நியமிக் கப்பட்டுள்ளார்.

இதற்கு முன் தமிழரான திரு. கே. வி. நவரத்தினம் நீதவானாகஇருந்து தமிழில் வழக்குகளை நடத்தி வந் தார்.

# சிங்கள அரச ஊழியர்கள் வடக்கே குவிக்கப்படுவர்!

## குடியேற்றக் கொள்கையின் முதலாவது கட்டம்!

வடக்கே சிங்களவர்களைக் குடி யேற்றப் போவதாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அண் மையில் அரசாங்க பாராளுமன் றக் குழுக்கூட்டத்தில் அறிவித்தி ருந்தாரல்லவா? இந்த ஆக்கிர மிப்புக் கொள்கையின் முதற்கட் டமாக, சிங்கள அரசாங்க ஊழி யர்களும், சிங்கள அதிகாரிகளும், சிங்கள ஆசிரியர்களும் வடக்கே அனுப்பிவைக்கப்படுவார்க ளென்று தெரியவருகிறது.

தமிழ்நிலங்களை ஆக்கிர மிக்கும் சிங்கள ஏகாதிபத்தி யத்தின்பேரினவாதக்கொள் கையின் முதல் நடவடிக்கை யாக அரசாங்கத் திணைக் களங்களை சிங்களவர்மயமாக் கும் திட்டம் செயற்படுத்தப் படவிருப்பதாக அறிய வரு கிறது.

தற்போது தமிழ்ப்பகுதியில் வேலை செய்யும் சிங்கள அரச ஊழியர்கள் யாரும் தென்னி லங்கைக்கு இடமாற்றம் கோரினால் எக்காரணம்கொண்டும் அதற்கு அனுமதிக்கக் கூடா தென்றும் அவர்களை கட்டா யமாக தமிழ்ப்பகுதியிலேயே வைத்துக் கொள்ளவேண்டு மென்றும் மேலதிகாரி களுக்கு அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளதாக சொல் லப்படுகிறது.

அதே சமயம் தமிழ் அரச ஊழியர்களை அற்பகாரணம் காட்டி கொழும்புக்கோ அல் லது வேறு சிங்கள ஊர்க ளுக்கோ மாற்றிவிட்டு, அத னால் காலியாகும் இடங்களி லும், தென்னிலங்கையிலி ருந்து சிங்களவர்களைக் கொண்டுவந்து நிரப்புவதற் கும் முயற்சிகள் மேற்கொள் ளப்படுகின்றனவாம்.

யாழ்ப்பாணத்தில் திட்ட மிட்ட சிங்களக்குடியேற்றம் நடத்துவதற்கு போதிய முடிக்குரிய விவசாயக்காணி கள் இல்லாத காரணத்தி னால், சிங்கள அரசாங்க ஊழியர்கள், சிங்கள ஆசிரி யர்கள், சிங்கள இராணுவத் தினர், சிங்களப் பொலிசார் ஆகியோரை இங்கு இட

—4-ம் பக்கம் பார்க்க

# "சிறைசென்றாலும், செவ்விரத்தம் சிந்தினாலும் சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்துப்போராடுவோம்"

## 'இம்மத்' இதழுக்கு அமிர் பேட்டி!

"புதிய அரசியலமைப்பு தமிழ் நாட்டினத்தின் இறை மையையும் தமிழ்ஈழத்தின் பிரதேச எல்லைகளையும் அங் கீகரிக்கத் தவறிவிட்டது. தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் — குறிப்பாக கிழக்கு மாகாணத்தில்—சிங் களக்குடியேற்றம்திவிரமாக நடைபெற்றுவருகிறது. சிங் களத் தொழிலாளர்களை குவி த்து தமிழ் பிரதேசங்களை அரசாங்கம் ஆக்கிரமிக்க முயற்சிசெய்துவருகிறது. இந்த அநீதியான ஆக்கிர மிப்பை எதிர்த்து—சிறைத் தண்டனை ஏற்க நேரிடினும் செவ்விரத்தம் சிந்த நேரிடி னும்—போராட நாம் வை



ராக்கியம் பூண்டுள்ளோம். எல்லாவித விளைவுகளையும் சந்திப்பதற்கு நாம் ஆயத்த மாக இருக்கிறோம். பிரதேச உரிமை இல்லாத நிலையில் நாம் ஒரு தேசிய இனமாக வாழமுடியாது. இந்த அடிப் படையை ஏற்காத அரசிய லமைப்புக்கு பங்காளியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒருபோதும் இருக்காது!"

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பம் பாயிலிருந்து 'இம்மத்' ஆங் கிலவார இதழுக்கு(1-9-78) அளித்த பேட்டியொன்றில் திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளார்.

"புதிய அரசியலமைப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது அவரவர் [illegible]கத் தைப் பொறுத்தது. அர சாங்கங்கள் அடிக்கடி மாறு வதும், அப்படி மாறும் போது அரசியல் சட்டங் களும் மாற்றப்படுவதும் சுதந்திரத்துக்கு பிற்பட்ட 30 ஆண்டுகால இலங்கை யின் வரலாற்றில் ஒரு வழ மையான அம்சமாகிவிட் டது" என்று இப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# "ஐ ஜி.பி. நியமனத்தில் தமிழர் ஒதுக்கப்பட்டதற்கு பொறுப்பாளி யார்?"

## அவுஸ்ரேலியாவிலிருந்து பறங்கியர் கேட்கிறார்!

ஜே. வான் சாண்டென் (J. Vansanden' 3, Westdale Court, Victoria 3087, Australia) என்னும் பறங்கிப் பிரமுகர் அவுஸ் ரேலியாவிலிருந்து, 22-7-1978ல் 'டிறிபியூன்' ஏட்டுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இவர் முன்பு இலங்கையில் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியவர். இவரது கடிதம் 16-9-78 'டிறிபியூன்' ஏட்டில் வெளிவந்துள்ளது.

புதிய ஐ. ஜி. பி. நியமனத்தில் தமிழர் களுக்கு இழைக்கப்பட்ட பாரபட்சத்தை தட்டிக் கேட்டுள்ள இந்த அவுஸ்ரேலியரான முன் னாள் பொலிஸ் அதிபரின் ஆங்கிலக் கடிதத் தின் தமிழாக்கம் அப்படியே இங்கு இடம் பெற் றுள்ளது.

ஐயா,

1978ம் ஆண்டு யூன் 10ம் திகதி ஜே. ஆரின் 'வாக்குறுதிகள்' என்ற தலைப் பில் உங்கள் இதழில் வெளியிடப்பட் டிருந்தவற்றில் ஐந்தாவது வாக்குறுதி பின் வருமாறு கூறுகிறது—

"நான் சிறீலங்காவின் ஒவ்வொரு குடிமகனையும் பாரபட்சமின்றி நடத்து வதோடு, அக்குடிமகன் முன்னேறு வதற்கு சமசந்தர்ப்பம் அளிப்பேன்"

ஆறாவது வாக்குறுதி பின்வருமாறு கூறுகிறது:

"இந்நாட்டின் குடிமக்களாக உள்ள சிறுபான்மை மக்களுக்கு — குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு—வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சமவாய்ப்பு அளிப்பேன்."

இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க் கும் போது மிக அண்மையில் புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் நடை பெற்ற நேரத்தில் அந்நியமனம் கிடைத்த வரிலும் பார்க்க சேவை மூப்பு கொண்டி ருந்த தமிழ் அதிகாரியின் உரிமை மேற் படி வாக்குறுதிக்கு முரணான முறையில் அலட்சியப்படுத்தப்பட்டதற்கு யார் பொறுப்பு என்ற கேள்வியை ஒருவர் கேட்கக்கூடும்!

— இவ்வாறு அக்கடிதத்தில் திரு. வான் சாண்டென் எழுதியுள்ளார்.


## படிக்கத் தவறாதீர்கள்!

பொலிஸ் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய

சட்டநாதபிள்ளையின் சாட்சியம்

முழுவதும்

"சன்சோனிக் கொமிஷன் எவிடென்ஸ்"

7-10-78 இதழில் இடம்பெறுகிறது

உங்கள் பிரதிகளை உறுதிசெய்துகொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ. என். பி. ஆட்சியின்கீழும் இனப்பாகுபாடு காட்டப்படுவது வெளிப்படை!

இக்கடிதத்தை எழுதியிருக்கும் வண. பிதா. சி. ஆர். டேலி அடிகளார் ஓர் அமெரிக்கர். உலகம் முழுவதும் பரந்து கிடக்கும் இயேசு சபைத் துறவிகள் குழுவைச் சேர்ந்தவர். கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் ஈழத்தில் மூதூர், சொறிக்கல்முனை, திருகோணமலைப் பகுதிகளில் தமிழ்ப்பணியாற்றி வருகிறார். தனிநாட்டுக்கொள்கையில் இவருக்கு கருத்து வேற்றுமையிருப்பினும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை வெளிப்படையாக எடுத்துக் கூறிக்கண்டிக்கத் தயங்காதவர். News Service ஆகஸ்ட் 78—137வது இதழில் Unfair discrimination (அநீதியான பாரபட்சம்) என்ற தலைப்பில் அவர் எழுதியிருந்த ஆங்கிலக்கடிதத்தின் தமிழாக்கம் இங்கு இடம் பெறுகிறது. தமிழில் தருபவர், இயேசு சபை யோசப் மேரி அடிகளார் அவர்கள்.

## இரண்டு உதாரணங்களை சுட்டிக்காட்டுகிறார் அமெரிக்க நாட்டு சுவாமி டேலி அடிகளார்!

தமிழர்கள் தனிநாடு பெறவேண்டும் என்ற சிலரின் விருப்பத்திற்கு நான் ஆதரவாளனல்ல! ஆனால் நடந்து கொண்டிருக்கும் சில செய்கைகளைப் பார்த்தால் தமிழர்கள் இந்த அரசாங்கத்தின் கீழும் பாகுபாடு காட்டப்படுகிறார்கள் என்பது வெளிப்படையாகின்றது.

ஒன்று: சில மாதங்களுக்கு முன் அமெரிக்காவில் இருந்து ஒரு கூடைப்பந்தாட்டக் கோஷ்டி (Basket Ball Team) இலங்கைக்கு வந்திருந்தது. அவர்கள் திறமை ஆட்டங்கள் (Exhibition games) விளையாடியதுடன் அகில இலங்கைத் "தேசிய மாணவர்" விளையாட்டுக் குழுவுடனும் ஓர் ஆட்டத்தை மேற்கொண்டிருந்தார்கள். இதற்குச் சற்று முன்னர் மாணவர்களுக்கிடையிலான அகில இலங்கைப் போட்டியில் கிழக்கு மாகாணத்திலிருந்து புனித மிக்கேல் கல்லூரி வென்றது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் அமெரிக்கக் குழுவுடன் விளையாடிய அகில இலங்கை மாணவ தேசிய கூடைப் பந்தாட்டக் குழுவிற்குக் கிழக்கு மாகாணத்திலிருந்து எவருமே அழைக்கப்படவில்லை.

மாணவர் தேசிய குழுவைத் தெரிந்தெடுத்தவர்களுக்கு அதற்கேற்ற காரணம் தெரிந்திருக்கக் கூடும். ஆனால் அதில் அழைக்கப்படாதவர்களுக்குத்தாங்கள் ஏன் அழைக்கப்படவில்லை; என்பதற்குக் காரணம் ஒன்று தான் தெரியும்— அவர்கள் தமிழர்கள்.

இரண்டு: அண்மையில் கடற்றொழில் அமைச்சர் கிழக்கிலுள்ள சுண்ணாம்புக் காளவாய் அனைத்தையும் அழித்து விடும்படி முப்படையினருக்கும் ஆணை பிறப்பித்திருந்தார். கிழக்கிலே சுண்ணாம்புத் தொழிலைத் தங்கள் வருவாயாகக் கொண்டு வாழும் கிராமங்கள் குவிந்து போயுள்ளன. இது அவர்களுடைய பரம்பரைத் தொழில். கடலில் காணப்படும் சிப்பிகளைக்கொண்டே தமது தொழிலை அவர்கள் மேற்கொள்வதன்றிக் கடலினுள் சென்று அங்குள்ள சல்லிக் கற்களை அவர்கள் உடைப்பதில்லை. ஆனால் அவர்களுடைய சுண்ணாம்புக் காளவாய்கள், அவர்களுடைய வாழ்க்கையின் மூலாதாரங்கள், தரை மட்டமாக்கப்படவுள்ளன. இவை யாவும் ஒரு அமைச்சரின் ஆணையால்!

அதே வேளையில் தென் மேற்குக் கரையோரத்திலே சல்லிக் கற்கள் எதுவித தடையுமின்றி நாசமாக்கப்படுகின்றன. இதனால் இந்தக் கரையோரம் கடலரிப்பிற்கு இரையாகி வருகின்றது. இதைப் பற்றி அரசுக்குப் பல ஆண்டுகாலமாக முறையீடுகள் செல்லாமலும் இல்லை;

இந்தச் சல்லிக் கற்களை உடைப்பவர்களை அரசு ஏன் என்றுகேட்காதது ஏன்? அதே வேளையில் சிப்பி சுட்டுச் சுண்ணாம்பு செய்யும் கிழக்கிலங்கை வாசிகள் மேல் முப்படைகளும் ஏவி விடப்பட்டது ஏன்? "ஏனென்றால் கிழக்கிலங்கை வாசிகள் தமிழர்கள்"

இப்படியான பாகுபாட்டிற்கு அரசாங்கத்திடம் தக்க காரணங்கள் இருக்கக் கூடும். ஆனால் மக்கள் மனதை நோகச் செய்வது என்ன வென்றால் இனப்பாகுபாடு இந்த நாட்டில் உண்டென்பதே.

## வர்த்தகத்துறையில் சிறுபான்மையினர் ஊடுருவலை முறியடிக்க வேண்டுமாம்!

அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனரே தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இனத்துவேஷத்தைக் கக்கியிருக்கிறார்;

கொழும்பில் சாரணர் இயக்க மண்டபத்தில் இடம் பெற்ற வர்த்தகர் சம்மேளனக் கூட்டத்தில் மத்திய வங்கியின் பிரதி ஆளுனர் திரு. எச். என். எஸ். கருணாதிலக பேசியதாகக் கூறப்படும் பேச்சொன்றை 26.9.78 வீரகேசரி வெளியிட்டுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"வியாபாரத் துறையில் ஈடுபட்டிருப்போரில் 75 சதவீதமானோர் சிங்களவர்களே. ஆயினும் சிறுபான்மையினரான ஏனைய 25சத வீதமானோரிடமே வர்த்தகம் சிக்கியுள்ளது. செட்டியார்கள் உட்பட சிறுபான்மையினரே வர்த்தகத்துறையில் வெற்றிபெற்று வருகிறார்கள். ஆகவே சிங்கள வர்த்தகர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இந்தச் சம்மேளனத்தை வளர்த்து இந்தச் சிறுபான்மையினரின் ஊடுருவலை முறியடிக்கவேண்டும், சிங்களவர்வங்கி, என்று புதிய வங்கி ஒன்று ஆரம்பிக்கப் பட்டு அதில்மட்டுமே சிங்களவர்கள் கணக்கு வைக்கவேண்டும்"

இவ்வாறு மத்திய வங்கிப் பிரதி ஆளுனர் பேசியிருக்கிறார். அரசாங்கத்தில்வகுப்புவாதம் இல்லையென்கிறார் ஜே. ஆர். அரசாங்க அதிகாரியே வகுப்புவாதம் பேசுகிறான். இதற்கு ஜனாதிபதி என்ன நடவடிக்கை யெடுக்கப்போகிறார்?



## விடுதலைப் பாசறையில் ஓர் புதிய சட்டத்தரணி!

தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகரான திரு. இ. த. விக்னராசா புதிய சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன், ஏனைய உயர்நீதிமன்ற நீதியரசர்களான திரு. வி. ரி. தாமோதரம், திரு. ஐ. எம். இஸ்மாயில், திரு ஆர். எஸ். வனசுந்தரா, திரு. ரி. சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் சென்ற திங்கள் 18-9-78 அன்று சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. அவர்களிடம் கிறிமினல் சட்டப் பயிற்சியும், பிரபல சட்டத்தரணியான திரு. சி. வி. விக்னேஸ்வரனிடம் சிவில் சட்டப் பயிற்சியும்பெற்ற திரு. இ. த. விக்னராசா, சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் முன்னாள் முகாமையாளரான இளைப்பாறிய தபால் அதிபர் திரு. இ. தம்பையா ஜே. பி. அவர்களின்புத்திரனுவார்.

சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிஆகியவற்றின் பழைய மாணவரான திரு. இ. த. விக்னராசா, யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிமாணவமன்றத்தின் தலைவராகவும், சட்டக்கல்லூரி இந்து மகா சபைத் தலைவராகவும் கடமையாற்றினர்.

பள்ளிப்பருவத்திலிருந்தே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராகஇருந்து வந்த திரு. இ. த. விக்னராசா வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளராகப் பணியாற்றி மாநாடுவெற்றிகரமாக நடந்தேற தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு பாஷையிலும் சிறந்த பேச்சாளரான திரு. இ. த. விக்னராசா சட்டக்கல்லூரி விவாதக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினராக கடமையாற்றியதுடன், சட்டக்கல்லூரி தமிழ் மன்றம் கடந்த 18.2.78இல் நடாத்திய எழுந்தமானபேச்சுப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுஅமரர் தந்தை செல்வாவின் ஞாபகார்த்தமாக சுதந்திரன் நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்ட தங்கப் பதக்கத்தைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## ஆலயத்தில் சிங்கள பொப் இசை நிறுத்தப்பட்டது!

10-9-78இல் யாழ் அடைக்கல நாயகி ஆலயத்தின் 50வது ஆண்டு விழாவில்— நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் தமிழ்க் கலை, கலாச்சாரத்துக்கு ஒவ்வாத சிங்கள 'பொப்' இசையை ஒருவர் இசைக்கும் பொழுது தமிழ் அன்பர்கள் சிலர் கல்லை வீசி அந்நிகழ்ச்சியை இடைநிறுத்தினார்கள், அச்சமயத்தில்சிங்களக் கட்சியைச் சேர்ந்தஒருவர் பொலீசாரை வரவழைத்து சிங்களப்பாடலை இடைநிறுத்தினார்கள் என்று கூறி அதில் சம்பந்தப் பட்டவருக்கு பொலிசினால் பிரச்சினையைக் கொடுத்ததுடன் அவரது வீட்டையும் தாக்கினார்களாம்.

ஆனால் தாக்கப்பட்ட குடும்பத்தின் தலைவியோ ஒரு சிங்களப் பெண். தகப்பன் தமிழர். அவரது மகன் தான் சிங்களப் பாடலை நிறுத்திவைத்தார்.

சென்ற வருடமும் இதே நிகழ்ச்சி அதே ஆலயத்தில் நடைபெற்ற பொழுது இந்த இளைஞன் அந்நிகழ்ச்சியில் சிங்களப் பாடலைப் பாடியதற்காக கலைநிகழ்ச்சியையே நிறுத்திவைத்தார். அப்படிப்பட்ட இளைஞனுக்குத்தான் இனத்துரோகியின் கைப்பொம்மைகள் தாக்கியதுடன் சிங்களப் பாடல் அக்கோயிலில் பாட வேண்டுமென முனைந்தனர்.

## அமைச்சருக்கு அபசகுனம்!

4-9-78 அன்று காலைமட்டு நகரிலிருந்து புறப்பட்ட மரதன் ஓட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வந்திருந்த நீதியமைச்சர்—மரதன் ஓட்டம் ஆரம்பித்து வைத்த பின்னர் தமது காரில் புறப்பட எத்தனித்தபோது அவரது காரின் டயர் ஒன்று காற்றுப் போயிருந்ததை அவதானித்தார். அதனால் தமது பிரயாணத்தை உடன் தொடரமுடியாமல் அங்கு நின்று வேறு டயர் ஒன்று மாற்றிய பின்னரே பிரயாணத்தைத் தொடர்ந்தார். இது ஒரு அபசகுனமாக மக்களால் பேசிக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுவாஞ்சிக்குடி இளைஞர்கள் பிணையில் விடுதலை!

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த தினமான செப்டம்பர் 7ம் திகதி அரசியலமைப்பை பகிஷ்கரிக்கும் முகமாக பாடசாலைகளுக்குச் செல்லவிடாது மாணவர்களைத் தடுத்ததாக குற்றம் சாட்டி களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 12 தமிழ் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் எதிராகப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கில் எதிரிகளான 12 இளைஞர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அ. கிருஷ்ணபிள்ளை, இ. கந்தசாமி, எஸ். கந்தசாமி கே. நவரத்தினம், எம். சிவனேசராசா, வி. கணேசமூர்த்தி, எ . விஸ்வாசம், எஸ். பரமலிங்கம், எம். சுந்தரலிங்க , ஏ. மகாலிங்கம், கே. இராசரத்தினம், எம். ஞானப்பிரகாசம், ஆகியோரே பிணையில் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களாவர். இவர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினர். இவர்கள் மீதான வழக்கு 25-10-78ம் நாள் பட்டிருப்பு நீதிமன்றத்தில் நடைபெறும்.

## புங்குடுதீவில் 'செல்வா' வீதி

புங்குடுதீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தந்தை செல்வா வீதி, மகாத்மா காந்திவீதி ஆகிய இரு வீதிகளையும் நாவலூர் பா.உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அண்மையில் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு புங்குடுதீவு மேற்கு த.வி.கூ. கிளைத்தலைவர் திரு. சு. பரராசசிங்கம் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் திரு. க. திருநாவுக்கரசு வி. எஸ். சிவலிங்கம், க. மகாலிங்கம் நா. தர்மலிங்கம், செ. கனகசபாபதி ஆகியோரும் உரையாற்றினர்.

## பனம் விதைகள் தாரீர்

வழக்கம்போல இம்முறையும் தங்களிடம் மேலதிகமாகவுள்ள பனம்விதைகளைத் தருமாறு பணிவாகக் கேட்கிறோம். பனைஅபிவிருத்தியில் உடனடியாக முப்பதுலட்சம் பனைகளை நாம் உண்டாக்குதல் வேண்டும். முன்னர் பலமுறை தந்தவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றி. பனம் விதை தந்து பனைவளம் பெருக்கிய பண்பாளர் பட்டத்தை கலாநிதி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கையால் பெற்றுக் கொள்ளுங்கள்.

# ஜே. ஆரின் முகமூடி கிழித்தெறியப்படும்!

## வெளிநாட்டுத் தமிழர் இயக்கங்கள் துரித பணி!

சிங்கப்பூர் பாணியில் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் எத்தனத்தில் அரசுடன்சேர்ந்து ஒத்துழைக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இதமாகவும், கனிவாகவும் விடுக்கப்பட்ட அழைப்புக்கள் நிராகரிக்கப்பட்டதை அடுத்து நிர்ப்பந்தங்கள், பயமுறுத்தல்கள் மூலம் அதனைச் சாதிக்கப் பார்கிறார் தார்மீகச் சாமியார்.

1947ம் ஆண்டு பொதுத் தேர்தலை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்க மறுத்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் கட்சியை அழிப்பதற்காக மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறித்து அவர்களை அரசியல் அநாதைகள் ஆக்கியது போன்று இப்போது பூர்வ குடித்தமிழர்களை நிர்மூலமாக்க புதிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாசிச ஆட்சி தலைப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள், பலவந்தங்களை 1960ல் தந்தை செல்வா எப்படிச் சமாளித்து சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் டட்லி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டாரோ அவரது வியூகம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இங்கு முன்னனுபவமாகப் பயன்படுமென்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் அரசுடன் ஒத்துழைக்கா விட்டால் வடக்கில் தாம் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தப்போவதாக ஹிட்லரைப்போன்று பாசிசப்பயமுறுத்தலை விடுத்திருக்கிறார் மீசைமுளைக்காத நவீன சர்வாதிகாரி. ஆனைப்பட்ட இஸ்ரேல் கூட "சியோனிசமும் இனவாதமே" என்று உலகு அங்கீகரித்ததைத் தொடர்ந்து கைப்பற்றிய சினாய், யோர்தான் மேற்குக்கரை (யூத) குடியேற்றங்களை வாபஸ் பெற ஆரம்பித்துவிட்டதை ஜே. ஆர். இன்னும் கேள்விப்படவில்லையா?

"தமிழ் ஈழத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் சிங்களக் குடியேற்றங்களும் ஆரிய பௌத்த சிங்கள ஜனநாயக சோசலிசம் பாசிசப் போக்கில் அமைந்தஇனவாதமே" என்று உலகெங்கும் வியாபித்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களும், சார்பு அணிகளும் குரல் எழுப்பவுள்ளன. மேற்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பாசிச இனவாதப் போக்கை அனைத்து உலகுக்கும் பிரச்சாரம் செய்யும் வகையில் பல் வேறு மொழிகளில் "ஸ்ரீலங்கா அரசின் குடியேற்றக் கொள்கை ஓர் இனவொழிப்புநடவடிக்கையே" என்று தலைப்பில் புள்ளி விவரங்கள், ஆதாரங்கள்சகிதம் இலக்கியங்களை வெளியிட்டு விநியோகிக்க சம்பந்தப்பட்ட இயக்கங்கள் உடனடியாக நடவடிக்கையில் இறங்கவிருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது.

சியோனிசப் பிடியில் இருந்து கைப்பற்ற அரபுப் பிரதேசங்கள் மீட்கப்பட்டதுபோல ஏற்கனவே நடந்துமுடிந்துவிட்ட குடியேற்றங்களும் அவற்றால் இழக்கப்பட்ட தமிழ்பூமியும் காப்பாற்றப்படஜே.ஆரின். புதிய பயமுறுத்தல் பெரிதும் உதவவேண்டு . தூங்கிக்கிடக்கிற புலியை இடறுவது, இடறுபவருக்கு நல்லதல்ல என்பதே சம்பந்தப்பட்டவர்களின் கருத்தாகும்.

## "தமிழ் தேசிய இனத்தை சிறுபான்மை இனமாக்கும் சூழ்ச்சி"

### ஜே.ஆரின் குடியேற்றத்திட்டத்துக்கு செந்தமிழர் இயக்கம் கண்டனம்

அரசாங்கத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள கலப்புக் குடியேற்றம் தமிழின சங்காரத்திற்கே வழி சமைக்கும் என்று செந்தமிழர் இயக்கத்தின் கொழும்புக் கிளை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழர்களைத் தெற்கிலும் சிங்களவர்களை வடக்கிலும் குடியேற்றுவதன் மூலம் இலங்கையில் ஒற்றுமையை ஏற்படுத்தி விடலாம் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு, எந்தத் தமிழ் மகனாலுமோ அல்லது எந்த இடதுசாரி ஜனநாயக சக்தியாலுமோ ஒப்புக் கொள்ளப்பட முடியாத ஒன்று.

தனது பாரம்பரிய நிலத்தை இழந்து விடுகிற எந்த இனமும், தேசிய இனம் என்ற தகுதிக்கு அருகதையற்றுப்போகும். சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழ்த் தேசிய [illegible]னத்தை வெறும் சிறுபான்மை இனமாக்கி காலகட்டத்தில் இலங்கையை முழுச்சிங்கள மயமாக்கும் திட்டமாகும் இது என்பதால், செந்தமிழர் இயக்கம், உத்தேச திட்டத்தை எதிர்க்கிறது. இப்பேரினவாதத்தைக் கைவிடும்படி அரசைக் கோருகிறது.

## பயிற்சிக்கு சென்ற தமிழர் மீது தாக்குதல்

### பண்டாரவளையில் சிங்களக் காடையர் வெறியாட்டம்!

யாழ்ப்பாணம், திருகோணமலை, புத்தளம், மன்னார் போன்ற பகுதிகளில் இருந்து விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலப்பயிற்சிக்காக பித்துருவெல அரசாங்க விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு சென்ற 18-9-78ம் திகதி திங்கட் கிழமை சென்றிருந்தனர். இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது பயிற்சி முடிந்து 22-9-78ப் திகதி வெள்ளி பி. பகல், ஆறு மணியளவில் தமது இடங்களுக்குச் செல்வதற்காக பண்டாரவளை புகையிரத நிலையத்தை நோக்கி நடந்து சென்றபோது பித்துருவெல சந்தியில் வைத்து உடமைகள் பறிக்கப்பட்டுச் சிங்களக்காடையர்களால் தாக்கப்பட்டனர். கைக்கடிகாரங்கள், காசு, மோதிரம், போன்ற பெறுமதியான பொருட்களைப் பறித்தெடுத்தனர் காடையர்கள். கத்தி பொல்லு, சைகிள் செயின் என்பவற்றால் தாக்கினர்கள். இதில் கிளிநொச்சி விவசாயப்பாடசாலைஅதிபர் மூர்ச்சை அடைந்த நிலையில் பலகாயங்களுடன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பயிற்சிக்குச் சென்றவர்கள் மொத்தம் 27 பேர் ஆவார்கள். இவர்களில் எழுவர் படுகாயங்களுக்குள்ளானார்கள். இது சம்பந்தமாக தாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வி. தர்மலிங்கம் பா.உ. ஆனந்தசங்கரி பா. உ. ஆகியோரிடமும், விவசாய திணைக்களத்திற்கும், முறையிடு செய்துள்ளனர். வருங்காலத்தில் தமிழ் பகுதிகளிலேயே தமது சேவைக்காலப்பயற்சி இடம் பெற வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

## தமிழனுக்கு தேவை சோறல்ல சுதந்திரமே!

"தமிழ் மொழிக்கும், தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்ற தென்றால் சலுசலா, லக்சலா, என்ற சிங்களப்பெயர்கள் இன்னும் தமிழ் மொழியில் ஏன் திணிக்கப்பட்டுள்ளன? அரசதிணைக்களங்களில் சிங்கள மொழி மூலம் மட்டுமே கருமமாற்றுவது ஏன்? தமிழ் மொழிக்கு தேசிய அந்தஸ்து என்றுஅரசியல் சட்டத்தில் எழுதி வைத்து விடுவதால் மட்டும் தேசியஅந்தஸ்து கிடைத்துவிடாது. நடைமுறையிலும், அது கைக்கொள்ளப்படல் வேண்டும். நடைமுறையில் கைக்கொள்ள வழிவகுக்கும் முன்னர் நாம் அந்தஸ்து கிடைத்து விட்டதென்று மகிழ்ச்சி கொள்ள முடியாது"

இவ்வாறு சமீபத்தில் அட்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் குறிப்பிட்டார். இ.தொ. கழக துணைத்தலைவர், திரு. மு. எள்ளாளன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இ.தொ. கழகத் தலைவரும், மன்னார் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. யி. எஸ். சூசைதாசன் பேசுகையில்: சோறு? சுதந்திரமா என்று நாம் சிந்திக்க வேண்டியகட்டத்தில் இருக்கிறோம். ஒரு சிலசலுகைகளைக் கொடுத்து எம்மவர்களின் இதயதாகத்தை அடக்கிவிட முடியாது. நாம் கேட்பது உரிமை, எமது முழுச் சுதந்திரம், எமது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள அயராது உழைப்போம் என்று கூறினர்.

இ.தொ. கழகப் பொதுச் செயலாளர் திரு. எஸ். கெங்கரட்ணம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்கத்தை எதிர்த்து உயிரையும் அர்ப்பணித்துப் போராட வேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் வீரமணி முழக்கம்!

''ஆதிக்கம் எப்படிப்பட்டதாக இருந்தாலும்—அது எங்கிருந்து வந்தாலும் தகர்த்தெறியப்பட வேண்டும். சாதி ஆதிக்கத்தை தகர்த்தெறிய தயவுசாட்சண்ய மின்றி தந்தை பெரியார் போர் தொடுத்தார். எனவே ஆதிக்க வெறிக்கு எதிராக பெரியார்காட்டிய நெஞ்சுரத்துடன் — உயிரையும் துச்சமாகமதித்து போராடுவதற்கு தமிழ் இளைஞர்கள் தயாராக வேண்டும்!''

—இவ்வாறு யாழ் திறந்த வெளியரங்கில் 27.9.78 மாலை நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றுண்டுவிழாக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திராவிடக்கழகப் பொதுச் செயலாளர்திரு.கி. வீரமணி முழங்கினார்.

திருக்குறள் முன்னணிக் கழகத்தின் ஆதரவில் இந்த விழா நடைபெற்றது.

பெரியார்நூற்றுண்டுவிழாவில் கலந்து கொள்வதற்கென சிங்கள சிறீலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து தமிழீழத்தின் முக்கிய தலை நகரங்களில் ஒன்றாகிய யாழ்ப்பாணத்துக்கு புகையிரத மூலம் 27.9.78 பிற்பகல் இரண்டு மணிக்கு வந்திறங்கிய திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி, தி.க. பிரமுகர்களான திரு.கணேசன், திருமதி பார்வதி கணேசன் ஆகிய பிரமுகர்களை யாழ்ப்பாணம் பா.உ. திரு. வெ. யோகேஸ்வரன் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன், வண்ணை ஆனந்தன், பற்குணம்; வி. பொன்னம்பலம் ஆகியோருட்பட பலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

புகையிரத நிலையத்திலிருந்து உதய சூரியன் கொடி பறந்த ஜீப் வண்டியில் நேராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்துக்கு வந்து சேர்ந்த திராவிடக்கழகப் பொதுச் செயலாளர் திரு.கி. வீரமணி, அங்கிருந்த தந்தை செல்வா, பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை சூட்டி மலர் தூவி அஞ்சலிசெலுத்தினார்.

பின் அங்கிருந்து தந்தை செல்வா சமாதிக்கு சென்று மலர் தூவி அஞ்சலிசெலுத்திய திரு. வீரமணி தற்போது அமைக்கப்பட்டு வரும் தந்தை செல்வாவின் நினைவுக் கோபுரத்தையும் பார்த்துப் பாராட்டுத் தெரிவித்தார்.

அதன் பின்னர், வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிரிழந்த ஒன்பது தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னங்களையும் திரு. வீரமணி பார்வையிட்டார்.

மாலை யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற பெரியார் நூற்றுண்டு விழாப் பொதுக் கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றினார். (பேச்சு விபரம் 8-10-78 ஞாயிறு சுதந்திரனில் இடம் பெறும்)

28-9-78 காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மதியம் யாழ் வளாகத்தமிழ் மன்றத்திலும் உரையாற்றிய திரு. வீரமணி, அன்று மாலையே புகையிரத மூலம் சிங்கள சிறீலங்காவுக்குத் திரும்பினார்.

வீரமணியின் தமிழீழவிஜயமும், சொற்பொழிவும் தமிழ் இளைஞர் மத்தியில் புதியஉத்வேகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ் வளாகத் தமிழ் மன்றத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி திரு. வீரமணி உரையாற்றினார்.

45 வயது நிரம்பப் பெற்ற திரு. வீரமணி ஒரு எம்.ஏ. பட்டதாரி; வழக்கறிஞர். 1962ம் ஆண்டு முதல் திராவிடகழக நாளேடான 'விடுதலை'யின் ஆசிரியராகப்பணி புரிந்துவருகிறார். பெரியார்—அன்னை மணியம்மை மறைவுக்குப்பின்னர், திராவிடக்கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பையும் திரு. வீரமணி ஏற்று கழகத்தை பெரியாரின் வழியில் நடத்திவருகிறார்.



## சம்பந்தமூர்த்தி பிணையில் விடுதலை

செப்டம்பர் ஏழு அரசியலமைப்பு பகிஷ்கரிப்பு இயக்கம் தொடர்பாக காசிஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட பதினொரு இளைஞர்களுக்கு எதிராகப் பொலிசாரால் தொடரப்பட்டுள்ள வழக்கில்12வது எதிரியாகக் குறிப்பிடப்பட்ட கல்குடாத் தொகுதி, த.வி.கூ. அமைப்பாளர்திரு.சம்பந்தமூர்த்தி, ஆயிரம் ரூபா பிணையில்மட்டக்களப்பு நீதவானால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவரைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டுமென்பதற்கு ஆதாரம் காட்டிசட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் நீதிமன்றத்தில் வாதாடியது தெரிந்ததே.

திரு. சம்பந்த மூர்த்தி மீதான வழக்கு இம்மாத இறுதியில் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப் படவிருக்கிறது.

## சர்வதேச சிறுவர் வார விசேட கருத்தரங்கு

இடம்: தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பணியகம்.

காலம்: 7-10-78 சனி மாலை 6.00 மணி.

தலைப்பு: பெற்றோர் விரும்பிய மொழியில் பாடபோதனை சிறுவர் சம்பந்தப்பட்ட மனிதஉரிமை மீதான மீறுதலே!''

யாழ். பெற்றோர் சங்கப் பிரமுகர் உரைநிகழ்த்துவர்.

—1-ம்பக்கத் தொடர்

மாற்றி குடியமர்த்துவதன் மூலமேசிங்கள ஆக்கிரமிப்பை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாம்.

ஒரு சிங்கள அரசாங்க ஊழியர், அல்லது சிங்கள ஆசிரியர் தெற்கிலிருந்து வடக்கேஅனுப்பப்பட்டால், அவரது குடும்பத்தினர் என்று கூறிக்கொண்டு15சிங்களவர்கள் வடக்கே அவருடன் வருவார்கள். இவர்களுக்கு அரசாங்கமே நிலம் வழங்கி வீடு கட்டிக்கொடுக்கும் இந்த முறையில் சிங்களக் குடியேற்றத்தை வட பகுதியில் ஊக்குவித்து நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்.



## லண்டனில் நடைபெற்றது என்ன? நவம் விளக்கம்!

16-9-78 அன்று லண்டனில் நடைபெற்ற திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ கலந்து கொண்ட கூட்டத்தில் நடைபெற்ற தென்னவென்பதை யாழ்ப்பாணத்தில் பெரியார் நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் விபரித்தார்.

அண்மையில் லண்டனிலிருந்து திரும்பிய திரு. நவரத்தினம் இதுபற்றிக்கூறியதாவது:—

லண்டனில் ஈழத்தமிழர் சார்பாக இயங்கும் 14குழுக்கள் வெவ்வேறாக இயங்குவதால், எந்த ஒரு குழுவின் சார்பிலுமின்றி, திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தாமாகவே லண்டனில் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தார். இக்கூட்டத்துக்கு அவரே தலைமை தாங்கினார். ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்களும் பெண்களுமாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தைக் குழப்புவதற்கு சில விஷமிகள் ஆரம்பத்திலிருந்தே முயற்சித்தனர். கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் 'காஸ்லீக்' என்று கதை கட்டினர். ஆனால் கூட்டம் அசையவில்லை. அதன் பின் சில நேரம் கழித்து லண்டனில் சாதாரண பாடசாலைமாணவரால் பயன்படுத்தப்படும் Smoke Bombs என்று சொல்லப்படும் துர்நாற்றத்தைப்பரப்பும் குண்டுகளை வெடித்தனர். இதனால் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. இந்தச் சேட்டையை செய்தவர்களை நமது இளைஞர்கள் கண்டு பிடித்துஅவர்களுக்கு தகுந்த பாடம் படிப்பித்து அங்கிருந்து வெளியேற்றினர்.

இங்குள்ள சில பத்திரிகைகளில் ஏற்கெனவே வெளிவந்தது போல தீவிரம் காணுது என்று கூறி அக்கூட்டத்தில் கண்ணீர் புகைக் குண்டுகள் எதுவும் வீசப்படவில்லை. இங்குள்ளது போலவே லண்டனிலும் ஒரு சிறு கூட்டத்தினர் எமக்கு மாறானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தச் சிறுசம்பவத்துக்குப்பின்கூட்டம்தொடர்ந்து இரவு 10 மணிவரை நடைபெற்றது. தலைவர் அமிர்தலிங்கம் இரண்டு மணிநேரம் பேசினார். நானும் அக்கூட்டத்தில்பேசினேன். திருமதி அமிர்தலிங்கமும் பேசினார். கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் திரு. அமிர்தலிங்கம் விளக்கமளித்தார்''

## மன்னார் கோவிற்குளம் தமிழர் கூட்டணியின் கிளை அங்குரார்ப்பணம்

20-8-78ஞாயிற்றுக்கிழமை கோவிற்குளம் தமிழர் விடுதலைக் கூட்டணித் கிளையின் முதலாவது பொதுக்கூட்டம் கோவிற்குளம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலய மண்டபத்தில் கூட்டப்பட்டது.

இலுப்பைக்கடவை முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு. வே. கைலாய பிள்ளை அடம்பன் முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு. பி.எம். செபமாலைமன்னார்மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர் திரு. இ. அல்பிறட் ஆகியோர் முன்னிலையில் கூட்டம்நடைபெற்றது, இதில்புதியநிர்வாகம்தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்:- க. இராமசேது உப-தலைவர்:- அ. சிற்றம்பலம் செயலாளர்:- பொன். இராமநாதன் உப- செயலாளர்:- க. சிவசோதிராஜா பொருளாளர்:- ச.இலங்கைராசா உப- பொருளாளர்: மா. சிவராசலிங்கம்நிர்வாக அங்கத்தவர்20பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஒரு தவறு

சுதந்திரன் 24-9-78 ஞாயிறு இதழின் 3ம் பக்கத்தில் சிங்களத் திணிப்பை எதிர்த்து எழுதப்பட்ட கட்டுரையின் அடியில், கட்டுரையை எழுதியவர்— மாணவர் பேரவை, சாவகச்சேரி என்றே இருத்தல்வேண்டும்; சாவகச்சேரி 'இந்துக் கல்லூரி' என்று தவறுதலாக அதில் இடம் பெற்றுள்ளது.

தமது கல்லூரியில் 'மாணவர் பேரவை' என ஓர் அமைப்பு கிடையாது என்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி [illegible] அறிவித்துள்ளார். —ஆர்

## சுதந்திரன் சந்தா

| | |
|---|---|
| ஓராண்டு சந்தா | ரூபா 50-00 |
| அரையாண்டு ,, | ரூபா 25-00 |

## பாப்பரசர் மறைவு

எழுபது கோடிக் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக வழிகாட்டியாக விளங்கிய புதிய பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் 34 நாட்கள் அருளாட்சியின் பின்னர் திடீரென இறைவனடி சேர்ந்துள்ளது கத்தோலிக்க மக்களுக்கு ஈடில்லாப் பேரிழப்பாகும். கத்தோலிக்க மக்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

—ஆ-ர்.


## ஒலிவ் ஸ்நானப்பவுடர்

எண்ணெய் முழுக்குக்கு சிறந்த ஒலிவ் ஸ்நானப்பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

உங்கள் தலைமயிரிலுள்ள அழுக்கு, பேன், சொடுகு ஆகியவற்றை நீக்குகின்றது.

## மில்க்வைற்-யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org